அனுப்புநர்

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

பள்ளிக்கல்வி இயக்குநர்,
பள்ளிக்கல்வி இயக்ககம்,
சென்னை–6.

ந.க.எண். 077188/எச்1/2019 நாள் : 13.08.2019

ஐயா/அம்மையீர்,

பொருள் : பள்ளி மாணாக்கராக மார்ச் 2018, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு எழுதியபின் மார்ச் 2019–ல் மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வெழுதாத பள்ளி இடைநின்ற மாணாக்கர் – 2019–2020ஆம் கல்வியாண்டில் மீண்டும் பள்ளியில் சேர்ந்து +2 தேர்வெழுதுதல் – சார்பு.

பார்வை :

1. சென்னை – 31, சேத்துப்பட்டு, சென்னை கிருத்துவ கல்லூரி மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் அவர்களின் கடித நாள்.14.06.2019, இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.18.07.2019.

2. பொள்ளாச்சி, பி.தங்கவேல் அவர்களின் மனு இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.18.07.2019.

3. திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியை சார்ந்த திரு.ஜோ.ஜான்பீட்டர் லாரன்ஸ் அவர்களின் மனு இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.18.07.2019.

*****

மார்ச் 2018–ல் மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வெழுதிய பின் உடல் நலமின்மை போன்ற காரணங்களால் பள்ளி மாற்றுச் சான்றிதழ் பெற்று, மார்ச் 2019–ல் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினை எழுதாத பள்ளி இடைநின்ற மாணாக்கர், தற்போது 2019–2020 ஆம் கல்வி ஆண்டில் பள்ளியில் சேர்ந்து +2 பயில அனுமதி கோரி பள்ளிகள் மூலமாகவும் மாணவர்கள், பெற்றோர்கள் மூலமாகவும் இவ்வலுவலகத்தில் கடிதங்கள் பெறப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட வகை மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, மாணவர்களது பள்ளிக்கல்வி பாதிக்கப்படுவதை தடுக்கும் பொருட்டு **2019–2020** ஆம் கல்வியாண்டில் அவர்களை மேல்நிலை இரண்டாம் ஆண்டு பள்ளியில் சேர்ந்து பயில்வதற்கு **பள்ளிக்கல்வி இயக்ககத்தால் அனுமதி வழங்கப்பட்டால்,** அம்மாணவர்களை கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு மார்ச் **2020** பருவத்தில பள்ளி மாணவர்களாக +2 தேர்வெழுத அனுமதிப்பதில் தடையேதும் இல்லை என்பதனையும், இனி வருங்காலங்களில், மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வெழுதிய பின், பள்ளியிலிருந்து இடையில் நின்ற மாணவரை மீண்டும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு வகுப்பில் சேர்த்தால் அவர்களை பள்ளி மாணவராக தேர்வெழுத அனுமதிப்பதில் எவ்வித தடையுமில்லை என்ற விவரத்தினையும் கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வெழுதிய அதே பாடத்தொகுதியில் மட்டுமே +2 வகுப்பில் பயில வேண்டும்.
2. மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வின்போது வழங்கிய நிரந்தர பதிவெண்ணைப் பயன்படுத்தியே +2 தேர்வெழுத வேண்டும்

மேற்குறிப்பிட்ட விவரத்தினை அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்குமாறு கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**நகல்**
அனைத்து அரசுத் தேர்வுகள் மாவட்ட உதவி இயக்குநர்கள்.